## ஒன்றாக வளர்வது மிகவும் சிறந்தது

# 4.7 எல்லாவற்றிலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்




**வேத வசனம்:** **ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.**
*1 கொரிந்தியர் 10:31*

**அறிக்கை:** **பூமி முழுவதும் தேவனுடைய மகிமையால் நிரம்பத்தக்கதாகத் தேவனை உயர்த்துங்கள்**



**சத்தியம்:** கர்த்தராகிய இயேசு சிலுவையினால் எல்லா மக்களுக்கும் சமாதானப்பிரபுவாக விளங்குகிறார். நாம் எல்லாவற்றிலும் அவரை மகிமைப்படுத்தும்படி அவர் விரும்புகிறார். அன்மூலம் மற்றவர்கள் அவருடைய இரட்சிப்பையும் மகிமையையும் அறிந்துகொள்ளுவார்கள்.

## வேதப் பகுதி: மத்தேயு 21:1-9

**பாடம்**

**1. எல்லா மக்களும் தேவனுடைய மகிமையைக் காண்பார்களாக:** இயேசு உலகத்தை விட்டுக் கடந்து செல்லும் முன்பு இறுதியாக எருசலேமுக்குள் நுழைந்தபோது அவர் சொன்னவைகளை அவருடைய சீஷர்கள் செய்தார்கள் என்பதை மத்தேயு 21 குறிப்பிடுகிறது. அவர்கள் ஒரு கோவேறு கழுதைக் குட்டியைக் கொண்டு வந்து அதன்மீது தங்கள் வஸ்திரங்களை விரிக்க அவர் அதன் மீது ஏறி அமர்ந்தார். ஒரு பெருங்கூட்டம் தங்களுடைய வஸ்திரங்களைச் சாலைகளில் விரிக்க மற்றவர்கள் ஓலைக் கீற்றுகளைக் கொண்டு வந்து சாலைகளில் விரித்தார்கள். அதோடு "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா. கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்" என்று மக்கள் தங்கள் குரல்களை உயர்த்தி வாழ்த்தினார்கள். இன்றும் தேவன் தம்முடைய மகிமையை வெளிப்படுத்த விரும்புகிறார். காரணம் தேவனுடைய பிள்ளைகள் வெளிப்படவேண்டும் என்று முழு சிருஷ்டிப்புகளும் ஆவலாகக் காத்திருக்கின்றன. இந்த உலகம் தேவனுடைய மகிமையை நம் வாழ்வின் வழியாகக் காணட்டும். (மத்தேயு 21:1-9, ரோமர் 8:22)

**2. இருதயங்கள் தேவனிடம் திரும்பும்படி தேவனை மகிமைப்படுத்துங்கள்:** உயர்ந்தவரும் பரிசுத்தருமாகிய கர்த்தர் இயேசு சொல்லுகிறார், "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்". அன்பின் நிமித்தமாக வந்த இயேசுவின் சிலுவை மரணத்தைப் பற்றியச் செய்தி மிகுந்த வல்லமை உள்ளது. ஆகையால் நாம் தேவனை உயர்த்தும்போது இருதயங்கள் தேவனிடம் திரும்பி அவருடன் ஒப்புரவாகும். (யோவான் 12:32, 1 கொரிந்தியர் 1:18)

**3. தேவன் வாலிபர்களை வல்லமையாகப் பயன்படுத்த முடியும்:** சிறியரில் ஒருவரையும் அற்பமாக எண்ணாதிருங்கள். வாலிபரையும் சிறுவர்களையும் பயன்படுத்தும் திட்டம் தேவனிடம் உண்டு. கற்பனை செய்யுங்கள்: சந்திரனுக்குச் சொந்த வெளிச்சம் இல்லை. அது இரவில் சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று உலகுக்கு வழங்குகிறது. 5000 பேருக்கு உணவு வழங்க இயேசு ஒரு சிறுவனின் ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் பயன்படுத்தி னார். அவர் தேவ மகிமையை வெளிப்படுத்தும்படியாகச் சிறுவர்களையும் அபிஷேகம் செய்தார். "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா". (யோவான் 6:1-13, மத்தேயு 21:15)

**4. எல்லாவற்றிலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்:** வேதாகமம் போதிக்கிறது, "ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்". நம்முடைய வார்த்தையாலும் நற்குணத்தாலும் தேவனை மகிமைப்படுத்த பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிகள் செய்கிறார். அதன் மூலம் தேவனிடமிருந்து காணாமல் போன மனிதர்கள் அவரை அறிந்துகொள்ள முடியும்.

**முடிவுரை:** தேவனாகிய கர்த்தர் சொன்னார், "சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசை வரைக்கும், என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்". ஆகையால் நாம் கர்த்தரை உயர்த்தி அவருடைய இரட்சிப்பையும் பிரசன்னத்தையும் பிறருக்குக் காட்டுவோம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.